Regd. No. M. 4593

தனிப்பிரதி விலை { உள்நாடு 0-1-0 / பர்மா, மலேயா, 0-1-6 (6-காசு)

# குடிஅரசு

Estd 1924.

பக்கங்கள் 6 — சனி வெளியீடு — வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0 / வெளிநாடு ரூ. 7-0-0

ஈரோடு ... சித்திரை 29 ... மலர் 31

## மாணவர் சுற்றுப்பிரயாணம்

### தஞ்சை மாவட்டம்

தோழர்கள்: சிறுவன் வீரமணி, புலவர் ஆறுமுகம், ஈரோடு சுப்பையன், காஞ்சி வெங்கட்ராமன், தில்லை வில்லாளன் ஆகியோர்.

12-5-46 சன்னாநல்லூர்
13— கங்களாஞ்சேரி (வெட்டாறு)
14— அலிவலம்
15— புலிவலம்
16— குளிக்கரை
17— எழுவேலி பெற்றோர் சங்க ஆண்டு விழா (திருவாரூர் வட்டாரம்)
18, 19, 20 கும்பகோணம் மாநாடுகள்.

மற்றவை பின்னர். கூட்டங்கள் நடத்த விரும்புகின்றவர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதவேண்டுகிறேன்.

வி. எஸ். பி. யாகூப்,
விசயபுரம் போஸ்டு, திருவாரூர்.

☆

### சென்னை—செங்கற்பட்டு

தோழர்கள் கி. தியாகராசன், எஸ். அப்பாவு ஆகியோர்.

12-5-46 செங்கற்பட்டு
13— ஆடீசன்பேட்டை, காஞ்சிவரம்
14— புத்தேரித் தெரு, காஞ்சிவரம்
15— ஆவடிபிள்ளையார் கோயில்
16— பிள்ளையார் பாளையம்
17— திருக்கழுக்குன்றம்
18— மதுராந்தகம்
19— ரெட் ஹில்ஸ்
20— பொன்னேரி
21— திருவள்ளூர்

முழு விவரங்கள் அவ்வப்போது அறிவிக்கப்படும். கூட்டம் அமைக்க விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுக.

என். வி. நடராசன்,
18, பெருமாள் முதலி தெரு,
பெத்துநாய்க்கன்பெட், சென்னை.

☆

### வடஆற்காடு மாவட்டம் முதற்பகுதி

வடஆற்காடு மாவட்ட திராவிடர் கழகத்தலைவர் ஆர். வெங்கட்ராமன் அவர்கள் தலைமையுடன் தோழர்கள் க. திருமாறன், இரத்தினவேலன், வே. ரா. பூங்காவனம், க. நெடுஞ்சோழன் முதலியோர்.

12, 13, 14-சுற்றுப்புற கிராமங்கள்
15— செங்கம்
16— புதுப்பாளையம்
17— சோரப்பனந்தல்
18— போளம்பட்டு
19— திருப்பத்தூர் (வ. ஆ.)

மற்றவை பின்னர் அறிவிக்கப்படும், விவரங்களுக்கு வடஆற்காடு மாவட்ட அமைப்பாளர் தோழர் வி. எம். இராசமாணிக்கம், வியாபாரம், திருப்பத்தூர் வடஆற்காடு; என்ற முகவரிக்கு எழுதுங்கள். இயக்கத்தோழர்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டுகிறார்.

☆

### சேலம் மாவட்டம்

தோழர்கள் தர. கு. பாலசுப்ரமண்யம், இளங்கண்ணன், அப்புல்லா ஆகியோர்.

12-5-46 ஏர்க்காடு
13— சேலம் (ஓய்வு)
14— ஓமலூர்
15— தர்மபுரி
16— பெண்ணாகரம்
17— பாப்பாரப்பட்டி
18— அன்னசாகரம்

மேலும் கூட்டம் அமைக்க விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுக.

பி. ஆர். சோமசுந்தரம்,
ஐவுளிக்கடை, மெயின் ரோட்,
செவ்வாப்பேட்டை, சேலம்.

☆

### திருச்சி மாவட்டம் இரண்டாம் பகுதி

பூவாளூர் தோழர் கு. நல்லதம்பி அவர்கள் பொறுப்பில் தோழர்கள் எஸ். செல்வராசு, ஆ. முத்துநெடுஞ்செழியன் ஆகியோர்.

14-5-46 மால்வாய்
15— கொளத்தூர்
16, 17— ஓய்வு
18— தாப்பாய்
19— கோமாகுடி
20— தின்னியம்
21— ஆங்கரை
22— அகளங்கநல்லூர்
23— கீழ்மாரிமங்கலம்
24— மகிழம்பாடி
25— புதூர் உத்தமனூர்
26— ரெத்தினங்குடி
27— நகர்
28— இடையாற்று மங்கலம்
29— பச்சாம்பேட்டை

மற்ற ஊர்கள் விவரம் அடுத்த இதழில்.

☆

### கோவை மாவட்டம்

தோழர்கள் இராவணன், இளங்கோவன் பாலகுரு ஆகியோர்.

14-5-46 ஆனைமலை
15— கேட்டூர்
16— வேட்டைக்காரன்புதூர்
17— பொள்ளாச்சி
18— உடுமலைப்பேட்டை
19— கணியூர்
20— தாராபுரம்
21— காங்கயம்
22— வெள்ளைக்கோயில்
23, 24— ஓய்வு (பழயகோட்டை)
25— பெருந்துறை
26— திருப்பூர்
27— கொடுமுடி
28— ஈரோடு

மற்றவை பின்னர். கூட்டம் அமைக்க விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுக.

என். இ. பாலகுரு,
பட்டக்காரர் பங்களா, ஈரோடு.

☆

### தென்னாற்காடு மாவட்டம்

தோழர்கள் மதுரை இராமானுசம், புலவர் மாணிக்கம், சி. இளவழகன் ஆகியோர்.

15-5-46 சிதம்பரம்
16— தில்லைவிடங்கன், பின்னத்தூர்
17— குயவன்பேட்டை
20— வல்லம்படுகை, சாலியந்தோப்பு
21— நளம்புத்தூர்
22— [illegible]
23— [illegible]
24— லால்பேட்டை
25— கந்தகுமாரம்

ஓ. எம். சுப்ரமணியன்.

சிதம்பரம் கூட்டத்தில் தோழர் அன்பழகனும் மற்றும் பல முக்கிய கூட்டங்களில் காஞ்சி கலியாணசுந்தரனாரும் கலந்துகொள்வார்கள்.

மற்றவை பின்னர். கூட்டம் அமைக்க விரும்புவோர் விவரங்களுக்கு கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுக.

புலவர் நா. மு. மாணிக்கம்,
தமிழாசிரியர்,
ஆர். சி. டி. உயர்நிலைப்பள்ளி,
சிதம்பரம்.

---

## பதிவு திருமணம்

திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டி அங்கத்தினரும், நிதிக்கமிட்டி அங்கத்தினருமான குடந்தை தோழர் வி. சின்னத்தம்பி அவர்களின் முன்னவர் வி. சுடலைமுத்து அவர்களின் குமாரர் எஸ். மோகன் பி. ஏ., அவர்களுக்கும் சென்னை கௌயாநாடி சோதிடசாலை உரிமையாளர் எஸ். தங்கவேலு அவர்களின் புதல்வி ராசலெட்சுமி அவர்களுக்கும் வாழ்க்கையொப்பந்தம் 6-5-46ந் தேதி சென்னை தண்டையார்பேட்டை பாலு முதலி தெரு 2ம் எண்ணுள்ள மணமகளின் இல்லத்தில் பதிவுத் திருமணமாக மிக வெற்றிகரமாக நடைபெற்றது. தோழர் வி. சின்னத்தம்பி அவர்கள் உடனிருந்து சிறப்பாக நடத்திவைத்தார்கள். இயக்கத் தோழர்களும் பிரமுகர்களும் வந்திருந்தார்கள். பல தோழர்கள் மணமக்களைப் பாராட்டிப் பேசினார்கள்.

குடி அரசு

1946-ஆம் ஆண்டு மே-மீ 11உ.

## மும்மூர்த்திகள் ஒப்பந்தம் முறிவு

வெள்ளையர், ஆரியர், முஸ்லிம்கள் ஆகிய மும்மூர்த்திகள் தங்களுக்குள் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டு இந்தியாவை ஆளுவதற்கு செய்துவந்த கூட்டு யோசனை பெரிதும் தோல்வியில் (ஒப்பந்த முயற்சி முறிவில்) கொண்டு போய் விட்டு விட்டதாகவே நினைக்கவேண்டிய அளவுக்கு நெருங்கிவிட்டது.

வெள்ளையர்கள் அனுபவம் முதிர்ந்த புத்திசாலிகள், ஆரியர்கள் ஊரார் உழைப்பில் வாழும், பேராசை படைத்த சூட்சிக்காரர்கள், முஸ்லிம்கள் ஒரே போக்கான முரட்டு பிடிவாதக்காரர்கள்.

இந்த மூவரும் ஒருவரை ஒருவர் ஏமாற்றுவதுஎன்றால் அது சாதாரணமான காரியமல்ல.

இந்த மூவரும் ஒன்றுசேர்ந்து யோசிக்கிறார்கள் என்பதில் கிரமமாகச் சொல்லவேண்டுமானால் வெள்ளையரும் ஆரியரும் ஒரு கட்சியாய், ஒரு லட்சியம்கொண்ட உள்கூட்டு நண்பர்கள் என்றும் இவர்கள் இருவர் புத்திக்கும், தந்திரத்துக்கும் பதில் சொல்லி சமாளிக்க வேண்டிய அளவுக்கு பொருப்புவாய்ந்த முஸ்லிம்கள் மற்றொரு கட்சி என்றும், ஆக இரண்டு கட்சி மாநாடு, மந்திர சபை என்றுதான் இதை சொல்ல வேண்டும்.

ஆரியர் உதவி இல்லாவிட்டால் வெள்ளையர் ஆட்சி அரை நாழிகை இங்கு நடைபெறமுடியாது. அது போலவே வெள்ளையர் பாதுகாப்பும், வெள்ளையர் ராணுவமும் இங்கு இல்லாவிட்டால் ஆரியர் வாழ்வு வினாடி அளவுகூட இந்த நாட்டில் இருக்கமுடியாது. இவர்கள் இருவரின் கூட்டு, உள் உளவு ஒப்பந்தம்தான் பிரிட்டிஷ் ஆட்சி 200 வருடகாலம் இந்த நாட்டில் இருக்கவும், இந்த நாட்டு குடி மக்கள் 100க்கு 90பேர் கல்வி, மானம் அற்ற கீழ் மக்களாகவும், 100க்கு 95பேர் சமுதாயத்தில் கீழான, தாழ்வான இழிமக்களாகவும், பாட்டாளி அடிமை மக்களாகவும் இருக்கவும் நேர்ந்ததாகும். இன்று இருக்கும் இந்த நிலை மாறவேண்டுமானால் வெள்ளையர் ஆரியர் ஆகிய இருவரின் இந்த உள் உளவு ஒப்பந்த சூட்சி, ஆட்சி மாறியே ஆகவேண்டும் என்பது சுதந்திரமும் மனிதத் தன்மையும் விரும்பும் மக்களது முடிவாகும். ஆனால் இதை வலியுறுத்த இன்று இந்நாட்டில் கட்சி இல்லை, மக்கள் இல்லை, கவலை கொண்டவர்களும் இல்லை. திராவிட கழகத்தார் இருக்கிறார்கள் என்றாலும் அதற்கு வேண்டிய கட்டுப்பாடு ...வு இல்லை ... அது இந்த ... வது என்கின்ற ...யத்தில் மாத்திரம் வெற்றி...க்கொண்டு மற்றதற்கு ஆயத்தமாகிக்கொண்டு வருகிறது.

இந்த சமயத்தில் நாட்டில் ஏற்படும் அரசியல் நிகழ்ச்சிகளுக்கு திராவிடர்கள் நிற்கதியாய் இருக்கிறார்கள் என்றாலும் சற்றேறக்குறைய திராவிடர் நிலையில் இருக்கும் மற்றொரு சமுதாயம் அதாவது முஸ்லிம்கள் பெருந்தொகையாய் இந்நாட்டில் இருப்பதால் அவர்களுக்குள் கட்டுப்பாடும் வலிமையும் இருப்பதால் அவர்கள் தங்கள்நலனுக்கும் பாதுகாப்புக்கும் என்று வாதிடுவதானது திராவிடர்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பயன்படக்கூடியதாக இருந்து வருகிறது இந்த நிலையாவது திராவிடர்களுக்கு ஏற்பட்டதற்குக் காரணம் திராவிட கழகம் தங்கள் நிலையையும் தேவைகளையும் மற்றும் முஸ்லிம்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் ஆகியவர்கள் நிலைமையும் ஆரியர் சூட்சியையும் துணிந்து வெளியிட்டு அதன் காரணங்களை விளக்க உறுதி நின்றதேயாகும்.

ஆகவே இன்று நடக்கும் மும்மூர்த்திகள் மந்திராலோசனை சபை என்பது இருகட்சி மந்திராலோசனைசபை என்றும் ஒரு கட்சியில் இருவர் அதாவது வெள்ளையர் ஆரியர் ஆகிய இருவர் என்றும், ஒரு கட்சியில் ஒருவர் அதாவது முஸ்லிம்கள் என்றும் சொன்னோம்.

இதில் ஒரு கட்சிக்கு நன்றாய் மக்களை பிரித்து வைத்து ஏமாற்றி, அனுபவம் கண்ட புத்தியும், பேராசை சூட்சியும் ஆயுதமாகவும் மற்றொரு கட்சிக்கு மான உணர்ச்சியும், முரட்டுப் பிடிவாதமும் ஆயுதமாகவும் இருக்கிறது. இந்த நிலையில இந்த 15-20 நாட்களாக மந்திராலோசனை சபை நடக்கின்றது. சபையில் நடக்கும் விவகாரம் ஒன்று தான், அதாவது "இத்தனை நாள் இருந்ததுபோல் இந்நாடு இருக்கக்கூடாது, முஸ்லிம் நாடு வேறு முஸ்லிம் அல்லாதார் நாடு வேறு என்பதாகப் பிரிந்து ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத தனி சுதந்திரநாடாக இருக்கவேண்டும் என்பதுதான்.

இதற்கு இரண்டு ஆரியர்களும் அதாவது ஐரோப்பிய ஆரியர்களும் இந்திய ஆரியர்களும் ஒப்புக்கொள்ள மறுக்கிறார்கள். முஸ்லிம்கள் பிடிவாதமாயிருக்கிறார்கள். வெள்ளையர்கள் மிக்க ஜாக்கிரதையாக, புத்திசாலித்தனமாக பிரிவினையை மறுக்கும் பொருப்பை தங்கள்மீது போட்டுக்கொள்ளாமல் ஆரியர்கள் மீது (காங்கரசார்மீது) போட்டுவிட்டு கண்ணைச்சிமிட்டி ஜாடை காட்டிக்கொண்டே ... கள் என்று ஒப்பு... கடத்தி வருகிறார்கள். அப்படி இல்லையானால் மடத்தைவிட்டுப் போகிற ஆண்டிக்கு நந்தவ...த்தைப்பற்றிய கவலை எதற்கு ...பதுபோல் அடியோடு நாட்டை விட்டுவிட்டுப் போவதாகச் சொல்லி ஒப்புக்கொண்டு வந்திருக்கும் வெள்ளையர் பிரதிநிதிகளுக்கு பிரிந்த இந்தியா ஒன்றுபட்ட இந்தியா என்கின்ற கவலை ஏன்? முஸ்லிம் இந்தியா முஸ்லிம் அல்லாதார் இந்தியா என்ற கவலை ஏன்?

மரியாதையாகக் கப்பல் வரும்படி செய்து வெள்ளை சிப்பாய்களை, அதிகாரிகளை அதில் ஏற்றிக்கொண்டு, தாங்களும் ஏறிக்கொண்டு பிறகு ஒலிபெருக்கியில் ரேடியோவில் பயணம் சொல்லிக்கொண்டு போய்விடவேண்டியது தானே முறை, இதைத்தானே காங்கரஸ் கேட்கிறது, முஸ்லிம் லீக்கும் சொல்லுகிறது. இந்நிலையில் வேறு யார் பிழைக்க வெள்ளையர் சமரசம் செய்ய வேண்டியிருக்கிறது? என்பது நமக்கு விளங்கவில்லை. ஆகவே இந்த மும்மூர்த்திகள் மந்திரசபை ஒரு தந்திரம் என்பதல்லாமல் இதை யார் தான் உண்மையான சுதந்திரசபை என்று சொல்லமுடியும் என்று கேட்கிறோம். நாமும் சொல்லுகிறோம், வெள்ளையர் வெளியேறிவிட வேண்டியதுதான் என்று. அதுவும் நிபந்தனையும் வாய்தாவும் இல்லாமல் உடனே உடுத்தின துணியுடன் வெளியேறவேண்டியதுதான் என்கின்றோம்.

இந்தியாவுக்கு இனி வெள்ளையன் ஆட்சியோ, வெள்ளையன் பஞ்சாயத்தோ தேவை இல்லை என்றே சொல்லுகிறோம். இன்று நடக்கும் சிம்லா மந்திர சபை இரு ஆரியரின் சூட்சி சபையே ஒழிய ஒரு சமரச மந்திரிசபை அல்ல என்று நன்றாய் கூறலாம்.

ஏனெனில் ஒன்றாயிருக்கும் கூட்டு இந்தியாவா பிரிந்த இந்தியாவா என்பது இனி இந்தியப் பிரச்சினையாய் இருக்க வேண்டிய அவசியமில்லாமல் போய் விட்டது. மற்றென்னவென்றால் வெள்ளையர் வெளியேறின இந்தியாவா வெள்ளையர் சம்பந்தமும், ஆரிய சூட்சி ஆதிக்கமும்கொண்ட இந்தியாவா என்பதுதான்.

திராவிட மக்கள் வெள்ளையர் சம்பந்தமும், ஆரிய சூட்சி ஆதிக்கமும் இல்லாத "இந்தியா" அது வேறு எப்படிப்பட்ட இந்தியாவானாலும் அதைத் தான் வேண்

# திராவிடர் கழகத்திற்கு

## (ஜஸ்டிஸ் கட்சிக்கு)

### 11-5-46ந் தேதி வரை அங்கத்தினர்கள் 44,636

இம்மாதம் 11௳ வரை திராவிடர் கழகத்திற்கு தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் சேர்க்கப்பட்டு தலைமை நிலையத்திற்கு அனுப்பப்பட்டுள்ள அங்கத்தினர்களின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. சேலம் | 7779 | 7. இராமநாதபுரம் | 2383 |
| 2. தஞ்சை | 7269 | 8. சென்னை இவ்வாண்டில் 988 | 2858 |
| 3. கோவை | 6190 | 9. தென் ஆற்காடு | 2343 |
| 4. திருச்சி | 5346 | 10. மதுரை | 1809 |
| 5. திருநெல்வேலி | 3423 | 11. செங்கல்பட்டு | 950 |
| 6. வடஆற்காடு | 3122 | 12. மற்ற இடங்களில் | 664 |

செயலாளர், மத்திய திராவிடர் கழகம், ஈரோடு

---

...து தங்கள் கடமை என்று ...க்கவேண்டியவர்களாவார் ... ஆதலால் மும்மூர்த்தி ஒப் ...மந்திரசபை முறிவைப்பற்றி ... முறியாமைப் பற்றியோ ...குக் கவலை இல்லை என்கி...ம்.

## ...ந்திரிசபை முதல் வேலை

காங்கரஸ் மந்திரிசபை பதவியேற்ற உடன் முதல் வேலையாக, அரசியல் குற்றவாளிகளை ('கைதிகளை') எல்லாம் விடுதலை செய்துவிட்டது, வசூலித்த அபராதங்களை வாபசு செய்துவிட்டது, குற்றவாளிகளாக நினைத்து பிடித்தடைக்க வெளியிட்ட வாரண்டுகளை எல்லாம் ரத்துசெய்து மறைந்து திரிந்துகொண்டிருந்தவர்களுக்கு வெளிப்படையாய் உலாவ வசதியான சுதந்திரம் அளித்துவிட்டது.

இவை காங்கரஸ் தனது போராட்டத்தில் வெற்றிபெற்றுவிட்டது என்பதற்கு அறிகுறி. இதற்குஆக அதை நாம் பாராட்டுகிறோம். காங்கரஸ் தோழர்கள் என்ன செய்து தண்டிக்கப்பட்டார்களோ, என்ன செய்ததற்குஆக தலைமறைவாகத் திரியவேண்டியவர்களானார்களோ அந்த காரியங்களுக்கும் பல்லாண்டுகூறி வாழ்த்துகிறோம். இதே குணம் இந்த நாட்டு, மான உணர்ச்சி உள்ள எல்லா மக்களிடமும் ஏற்படவேண்டுமென்றும் ஆசைப்படுகிறோம். ஒற்றுமை, கட்டுப்பாடு, மானம்அற்ற கோழை, சுயநல ஈன மக்களுக்கு இது ஒரு படிப்பினையாக இருக்கவேண்டுமென்று வலியுறுத்திக் கூறுகிறோம். ஆகவே காங்கரசின் முதல் வேலைக்கு இந்த பாராட்டு போதுமானதாக இருக்கட்டும்.

ஆனால் இந்த நாட்டுக்கு காங்கரஸ்காரர்கள் செய்யவேண்டிய முதல்வேலை இதுவா? அல்லது இதுதானா? இந்நாடு அறிவு, கல்வி இல்லாத மக்களை 10-க்கு 90 விதம் கொண்டிருக்கிறது. மானம் மனித சுதந்தரம் இல்லாத மக்களை 100க்கு 95விதம் கொண்டிருக்கிறது.

"தரித்திரமும் (ஏழ்மையும்) செல்வமும் (பணக்காரத்தன்மையும்) அவனவன் தலைவிதிப்படி, கடவுள் செயல்படி-தான் ஏற்படும்." என்று (ரஷ்யா தவிர்த்து) உலகம் முழுமையும் சொல்லப்பட்டாலும் இந்த 100க்கு 90 தற்குறி (கல்வி இல்லாத) தன்மையும், 100க்கு 95 கீழ்ஜாதி, (ஈனநிலை) தன்மையும் இங்கு இந்த நாட்டில் மாத்திரம் இருப்பதற்குகூட ஒவ்வொருவனின் தலைவிதியும், கடவுள் செயலும் காரணமா என்று கேட்கிறோம்.

சரியாகவோ தப்பாகவோ பார்ப்பனர்கள் பதவிக்கு வந்துவிட்டார்கள். போதாக்குறைக்கு ஒரு பார்ப்பனரே காங்கரஸ் தலைமைப் பதவிக்கும் வந்துவிட்டார். இவர்கள் வந்த சந்தோஷத்திற்கு நாசவேலை செய்தவர்களை விடுதலை செய்தது மிகவும் சரியென்றே வைத்துக்கொள்ளலாம். அதாவது ஒரு நாட்டை ஒரு அரசன் போரில் வென்ற உடன் போர் முடிந்ததும் போர்வீரர்களுக்கு நன்றி காட்டுவதற்கு ஆக போர்வீரர்களை தங்கள் இஷ்டப்படி ஜெயித்தநாட்டிலுள்ள செல்வங்களையும் பெண்களையும் அனுபவிக்கவும், 3மணிநேரம் 6மணிநேரம் என்று போர்வீரர்களுக்கு காலமும் அனுமதியும்கொடுத்துவிடுவதுஎன்பதும் போர்முறையின் ஒரு சம்பிரதாயம் என்று பெரியவர்கள் சொல்லுவார்கள். இதுபோல் இன்று காங்கரஸ் ஆட்சி வெற்றி மகிழ்ச்சி இருக்கலாம். ஆனால் நீண்ட நாளாக சூத்திரன், பறையன், சண்டாளன், வேசிமகன், அடிமை என்று இருந்துவருகின்ற 100க்கு 95 மக்களுக்கு காங்கரஸ் ஆட்சி பதவிக்கு வந்தஉடன் ஒரு சந்தோஷ சேதி வேண்டாமா? பார்ப்பனர்களுக்கு இதைப்பற்றிக் கவலையில்லாவிட்டாலும் சூத்திரன், பறையன், இழிமக்கள் என்று கருதப்படுகிற, சட்டப்படி நடத்தப்படுகிற 4ம் ஜாதி, 5ம் ஜாதி மந்திரிகளுக்குஆவது சட்டசபை அங்கத்தினருக்குஆவது அறிவு, மான உணர்ச்சி இருக்கவேண்டாமா? என்று கேட்கிறோம்.

இதோடு மாத்திரம் நாம் நின்றுவிடாமல் வெற்றிப்பரிசாக விடுதலைபெற்று வெளியாகும் தேசியப் போர்வீரர்களையும் உங்கள் முதல்வேலை மறுபடியும் ஒருதரம் நாசவேலைதானா அல்லது உங்கள் (உங்கள் மீது சுமத்தப்பட்ட) இழிவை, ஈனத்தை நீக்கிக்கொள்ள ஒரு சொட்டு வேர்வையையாவது சிந்தப்போவதில்லையா? இதற்கு வேலைசெய்ய நாங்களே தானா? என்று கேட்டு விடுதலை வீரர்களை வரவேற்கின்றோம்.

---

## கிருஷ்ணன்—பாகவதர்

கலைவாணர்கள் என்.எஸ். கிருஷ்ணன், எம். கே. டி. பாகவதர் இவர்களை விடுதலை செய்யும்படி பல நகரசபைகளும், பொதுமக்களும் கேட்டுக்கொண்டும் அட்வைசரி சர்க்கார் இதுவரை அவ்வேண்டுகோளைக் கவனிக்கவில்லை. இப்பொழுது பொதுமக்கள் சர்க்கார் என்பது வந்துள்ளதால் இவர்களேலும் இசைமணிகள் இருவரிடமும் கருணைகாட்டி உடனே விடுதலை செய்வார்களென்று பொதுமக்கள் எதிர்பார்க்க உரிமையுண்டு.

ஆதலால் நாட்டிலுள்ள எல்லா நகரசபைகளும், பொதுமக்கள் கழகங்களும், தனிப்பட்ட பிரமுகர்களும், முன்போலவே இரு கலைஞர்களுக்கும் கருணை கோரி சென்னை மந்திரிசபை நீதி மந்திரிக்கு தீர்மானங்களை தந்திமூலமும், தபால் மூலமும் உடனே அனுப்பிவைக்க வேண்டியது அவசியமாகும்.

---

### ஒரு திருத்தம்

4-5-46ந்தேதிய "குடி அரசு" 8ம் பக்கம் 2ம் கலத்தில் பட்டுக்கோட்டை திராவிடர் கழகத்தைப்பற்றி வந்துள்ள செய்தியில் 1940ம் ஆண்டிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டது என்றிருப்பதை ... என்று வாசிக்கும்படி வேண்டுகிறோம். (கு-ர்)

குடந்தையில்

# தஞ்சை மாவட்ட மாநாடுகள்

18, 19-5-46 சனி ஞாயிறு கிழமைகளில் கும்பகோணத்தில் சர் பி. தியாகராயர் பந்தலில் நடைபெறும்.

## 18-5-46 திராவிடர் மாநாடு

தலைவர்:-

என். அர்ச்சுனன் அவர்கள்

(இளைய பட்டக்காரர்) பழயகோட்டை. இரவு 9-30 மணிக்கு காஞ்சி திராவிட நடிகர் கழகத்தாரால் மாநாட்டின் பந்தலிலேயே "சந்திரோதயம்" என்ற நாடகம் தலைவர் பெரியார் அவர்களின் தலைமையில் நடைபெறும்.

## 19-5-46

## சுயமரியாதை மாநாடு

தலைவர்:- விருதுநகர் தோழர்

A. V. P. ஆசைத்தம்பி அவர்கள்

இரவு 9-30மணிக்கு காஞ்சி திராவிட நடிகர் கழகத்தாரால் "சிவாஜி கண்ட இந்து ராஜ்யம்" என்ற நாடகம் தஞ்சை த்தோழர் பி. வேணுகோபால் பி. ஏ., பி. எல்.' அவர்கள் தலைமையில் நடைபெறும்.

மாநாட்டுக்கான எல்லாவிதக் காரியங்களும் தீவிரமாகச் செய்யப்படுகிறது.

பிரதிநிதி கட்டணம் ரூ. 5. பார்வையாளர் ரூ. 1. பெண் பிரதிநிதிகளுக்கும் கட்டணம் உண்டு. சாப்பாட்டிற்குக் கட்டணம் செலுத்தவேண்டும்.

வி. லெட்சுமிபதி,
வரவேற்புக்குழு செயலாளர்

## சேர்த்தீர்களா?

திராவிடர் கழக அங்கத்தினர் சேர்க்கும் இரசீது புத்தகங்கள் 2000த்திற்கு மேல் (50,000 அங்கத்தினர்கள் சேர்க்கக்கூடியவை) பல கழகங்களுக்கும் தோழர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன. ஆனால் இவைகளுக்காக இதுவரை 10000 அங்கத்தினர்களுக்கும் குறைவாகவே சேர்த்தனுப்பி யிருக்கிறார்கள். இந்த முறையில் வேலைசெய்தால் எப்பொழுது ஒரு இலட்சம் அங்கத்தினர்களைச் சேர்த்து முடிப்பது?

இரசீது புத்தகங்களைப் பெற்ற தோழர்களும், கழக நிர்வாகஸ்தர்களும் அன்புகூர்ந்து உடனே முடித்து அனுப்ப வேண்டுகிறேன்:

செயலாளர்,
மத்திய திராவிடர் கழகம்,
கச்சேரிவீதி, ஈரோடு.

## மதுரை மாநாட்டில்

திராவிடர் கழகத்திற்கு அங்கத்தினர்கள் சேர்க்கப்படும். தோழர்கள் அனைவரும் இச்சந்தர்ப்பத்திலாவது சேர வேண்டுகிறோம்.

இரசீது புத்தகங்கள் வேண்டிய தோழர்களும் பெற்றுக்கொள்ளலாம்.

திராவிடர் கழக விதிமுறைகள் அடங்கிய புத்தகங்கள் மாநாட்டுப் பந்தலில் விற்கப்படும்.

விலை அரை அணா.

## மேற்கு சென்னை திராவிடர் மாநாடு

26-5-46 ஞாயிறு காலை 8மணிக்கு பெரம்பூர் டாக்கீசில் டி மாநாடு நடைபெறும்.

தலைவர்:- தோழர் கே. அன்பழகன் எம். ஏ., திறப்பாளர்:- தோழர் எ. திராவிடமணி பி. ஏ., கொடியேற்றுபவர்:- தோழர் சி. தங்கராஜ்.

ஊர்வலம்: மாலை 3மணிக்கு கீழ் பாக்கம் போலீஸ் ஸ்டேஷன் அருகிலுள்ள ஸ்பர்டாங்க் எரியிலிருந்து புறப்பட்டு, சூளை கான்ரான்ஸ்மித்நகர் மைதானத்தில் முடிவுறும்.

பொதுக்கூட்டம்:- மாலை 5-30 மணிக்குச் சரியாய் கான்ரான்ஸ்மித் மைதானத்தில் தோழர் சி. ஏகாம்பரம் தலைமையில் நடைபெறும்.

மாநாட்டிலும், பொதுக்கூட்டத்திலும், பெரியார், தளபதி அண்ணாதுரை பேசுவர்.

கட்டணம் அணா 4

என் எஸ் தங்கரூபன், வ க தலைவர்
எஸ் டி எம் பழனிச்சாமி
ஆர் கே முனுசாமி செயலாளர்கள்

## "தொழிலாளர் மித்திரன்"

எதிர்பார்த்தபடி பத்திரிகை பிரசுரிப்பதற்கான தாள் குறித்தகாலத்தில் கிடைக்கப்பெறாததால் 11-5-46ல் வரவேண்டிய "மித்திரன்" 18-5-46ல் வெளிவரும்.

மானேஜர்,
தொழிலாளர் மித்திரன், பாண்டிச்சேரி.

## வெளிவந்துவிட்டது

ஜனாப் A. A. ரவூப் எழுதிய Meet Mr Jinnah என்ற புத்தகத்தின் கடைஅத்தியாயத்தின் மொழிபெயர்ப்பே

## 'இதோ ஜனாப் ஜின்னாஹ்'

தமிழில் தருபவர்: ரவணசமுத்திரம்
R. P. M. கனி B. A.,
தனிப்பிரதி அணா 4.

கிடைக்குமிடம்:-
சங்கு காரியாலயம், காரைக்கால்.

## நடக்க இருப்பவை

★12-5-46 ஞாயிறன்று இ 8மணிக்கு துறையூர் திராவி கழகச்சார்பில் தேவாங்கர் சங் சங்கத்தில் "நாட்டுப்பிரிவினை பற்றி சொற்போர் நிகழும்.

★15-5-46 புதன்கிழமை மா 5-30மணிக்கு பெரம்பூர் பாள் அம்மையார் பவுத்த நிலைய தோழர் வி. ஆர். தாமோதர தலைமையில் புத்தர்பகவன் பிற பெருநாள் 2490வது ஆண்டு வைசாக முழுமதி நிறைவு விழா நடைபெறும். தோழர்கள் வி. எ. ராமச்சந்திரன், வி. பி. எஸ். மணியர் மற்றும் பல அறிஞர்கள் சொற்பொழிவாற்றுவர்.

★16-5-46 வியாழனன்று காலை 9 மணிக்கு தாத்தையாங்கார் பேட்டை தோழர் P. V. B. சுப்பிரமணியம் அவர்கள் குமாரனின் பெயர்சூட்டுவிழாவும் ஆண்டுவிழாவும் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் தலைமையில் நடைபெறும். திருச்சி தோழர் டி. பி. வேதாசலம் அவர்களும், மணியம்மையார் அவர்களும் கலந்துகொள்வார்கள்.

★17-5-46 வெள்ளிக்கிழமை மாலை 5-30 மணிக்கு திருக்காட்டுப்பள்ளி காவிரியாற்றில் திருச்சி தோழர் டி. பி. வேதாசலம் அவர்கள் தலைமையில் பெரியார் ஈ.வெ. ரா. சொற்பொழிவாற்றுவார்கள்.

★12-5-46 திங்கள் 3மணிக்கு சிறுதையூர் தேவி சோடா பாக்டரியில் லால்குடி தாலுக்கா திராவிடர் கழக மாநாடு நடத்துவதுபற்றி ஆலோசனைக் கூட்டம் நடைபெறுமென தோழர் கு. நல்லதம்பி தெரிவிக்கிறார்.

★14-5-46 செவ்வாய் மாலை 6மணிக்கு தி. தா. திம்மராய சமுத்திரத்தில் பகுத்தறிவு வாசகசாலையொன்றை தோழர் டி. பி. வேதாசலம் அவர்கள் திறந்துவைப்பார். தோழர் வி. பாலசுப்ரமணியம் தலைமை வகிப்பார்.


தோழர்களே நீங்கள் கறுப்புச்சட்டைப்படையில் சேர்ந்துவிட்டீர்களா?
இல்லாவிடில் இன்றே சேருங்கள்.



முதலில்

உடலைச் சுத்தமாய் வைத்துக்கொள்ளுங்கள். இரவில் படுக்கும்போது ஜெயராம் காயசுத்தி லேகியத்தை ஒரு டோஸ் சாப்பிட்டு மேலே கொஞ்சம் பால் குடியுங்கள்; மறுநாள் காலையில் எவ்வளவு சுறுசுறுப்போடும், உற்சாகத்தோடும் படுக்கையைவிட்டு எழுந்திருக்கிறீர்களென்பதை நீங்களே உணருவீர்கள்.

உடலுக்கு புத்துணர்ச்சியளிக்கும் அற்புத மருந்து

ஜெயராம்

காயசுத்தி லேகியம்

தயாரிக்குமிடம்:-

ஜெயராம் வைத்தியசாலை,
28, காசிவிஸ்வநாதர் கீழவீதி, கும்பகோணம்.

# கழகம் அமைத்தார்கள்

20-4-46ல் வடஆற்காடு புதுப்பாளையம் திராவிடர் கழகத்திற்கு 1946ம் ஆண்டிற்கு தோழர்கள் கே. வி. வெங்கட்ராமன் தலைவராகவும், பி. ஆர். குப்புசாமி செயலாளராகவும், எம். நடேசன் துணைத் தலைவராகவும், கே. கோபால்சாமி பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

• •

21-4-46ல் மாயவரம் தாலுக்கா குற்றாலம் திராவிடர் கழகத்திற்கு 1946ம் ஆண்டிற்கு தோழர் எம். ரத்தினசாமி தலைவராகவும், தோழர்கள் வைத்தியலிங்கம், சோமசுந்தரம் செயலாளர்களாகவும் கொண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

• •

13-4-46ல் குளித்தலை பாரதிதாசன் படிப்பகத்திற்கு 1946ம் ஆண்டிற்கு தோழர் கே. ஆர். வையாபுரி தலைவராகவும், சு. முருகேசன் செயலாளராகவும் கொண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

o o

25-4-46ல் திருச்சம்பள்ளி திராவிடர் கழகத்திற்கு 1946ம் ஆண்டிற்கு தோழர்கள் டி. இராமசாமி தலைவராகவும், டி. கே. இராலிங்கம் செயலாளராகவும் மற்றும் ஆறுபேர் உறுப்பினர்களாகவும் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டது.

o o

28-4-46ல் நாமகிரிப்பேட்டை திராவிடர் கழகத்திற்கு 1946ம் ஆண்டிற்கு தோழர் செ. முத்துகிருஷ்ணன் தலைவராகவும், எஸ். பாதுஷா, வி. சீனுவாசன் செயலாளர்களாகவும் மற்றும் 8பேர் உறுப்பினர்களாகவும் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டது.

o o

24-4-46ல் சென்னை புரசை திராவிடர் கழகத்திற்கு தோழர்கள் எ. மகிமைதாசன் தலைவராகவும், எஸ். டி. எம். பழனிசாமி செயலாளராகவும் மற்றும் 7-பேர் உறுப்பினர்களாகவும் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டது.

o o

24-4-46ல் நடைபெற்ற கள்ளிகுளம் திராவிடர் கழகத்திற்கு 1946ம் ஆண்டிற்கு தோழர்கள் டி. எம். சாமி தலைவராகவும், எ. சேக் செயலாளராகவும், மற்றும் 14பேர் உறுப்பினர்களாகவும் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டது.

o o

21-4-46ல் செங்கம் தாலுக்கா திராவிடர் கழகத்திற்கு 1946ம் ஆண்டிற்கு தோழர்கள் ஆர். வெங்கடாசலம் தலைவராகவும், ஜி. முத்துசாமி செயலாளராகவும் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டது.

o o

21-4-46ல் திருவண்ணாமலை திராவிடர் கழகத்திற்கு 1946ம் ஆண்டிற்கு எஸ். முருகையா தலைவராகவும், எ. பெருமாள் செயலாளராகவும் மற்றும் 15பேர் உறுப்பினர்களாகவும் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டது.

o o

தென்னாற்காடு ஜில்லா குருக்கத்தஞ்சேரி திராவிடர் கழகத்திற்கு 28-4-46ல் தோழர்கள் டி. கே. மேகராசன் தலைவராகவும், எம். மாணிக்கம் செயலாளராகவும் மற்றும் 6பேர் உறுப்பினர்களாகவும் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டது தோழர் எம். இராமதாசு தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கே. பெரியதம்பி, என். முருகேசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

o o

21-4-46ல் அசனமாப்பேட்டை திராவிடர் கழகத்திற்கு 1946ம் ஆண்டிற்கு தோழர்கள் சி. பொன்னுசாமி தலைவராகவும், தி. வி. நாராயணசாமி செயலாளராகவும் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டு இரணியன் அல்லது இணையற்ற வீரன் என்ற நாடகத்தை நடத்த முடிவு செய்யப்பட்டது.

o o

24-4-46ல் சலகண்டபுரம் திராவிடர் கழகத்திற்கு 1946ம் ஆண்டிற்கு தோழர்கள் நா. அ. சித்தப்பன் தலைவராகவும், கு. ந. அர்த்தனாரி செயலாளராகவும் மற்றும் 9-பேர் உறுப்பினர்களாகவும் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டது.

o o

சூலூர் திராவிடர் கழகத்திற்கு 1946ம் ஆண்டிற்கு தோழர்கள் எஸ். கே. கருப்பண்ணன் தலைவராகவும், எம். கந்தசாமி செயலாளராகவும் மற்றும் 6பேர் உறுப்பினர்களாகவும் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டது. சுயமரியாதைச் சங்கத்திற்கு தோழர் எ. என். அற்புதசாமியைத் தலைவராகக் கொண்ட ஒர் கமிட்டியும், தோழர் எஸ். கே. கருப்பண்ணன் தலைமையில் நிதி வசூல் கமிட்டி ஒன்றும் அமைக்கப்பட்டன.

o o

கூடலூர் O. T. திராவிடர் கழகத்திற்கு 1946ம் ஆண்டிற்கு தோழர்கள் வ. கா. ச. சண்முகசுந்தரம் தலைவர், பி. பெருமாள் துணைத்தலைவர், வ. மொட்டையாண்டி செயலாளர், அ. இளங்கோ துணைச்செயலாளர், எ. சி. கோவிந்தன் பொருளாளர் மற்றும் ஐவர் உறுப்பினர்கள் ஆகக் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டது.

o o

1-5-46ல் நீடாமங்கலம் திராவிடர் கழகத்திற்கு 1946ம் ஆண்டிற்கு தோழர் ஆர். இமயவரம்பன் தலைவராகவும், ஜி. துரைராசன் செயலாளராகவும் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டது. தோழர் ஆர். விசுவநாதன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர்கள் எஸ். சரவணன் பி. எ., ஜி. கனகசபை ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

o o

28-4-46 கடலூர் மஞ்சகுப்பம் திராவிடர் கழகத்திற்கு தோழர்கள் மா. கோவிந்தன் தலைவராகவும், தனசாமி செயலாளராகவும் மற்றும் 8-பேர் உறுப்பினர்களாகவும் கொண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

o o

28-4-46ல் ராசிபுரம் திராவிடர் கழகத்திற்கு தோழர்கள் என். திருமலைசாமி தலைவராகவும், எ. பழனியப்பன் செயலாளராகவும் மற்றும் ஐவர் உறுப்பினர்களாகவும் கொண்ட செயற்குழு சேலம் மாவட்ட திராவிடர் கழகத் தலைவர் தோழர் ஜி. பி. சோமசுந்தரம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டது.

o o

23-4-46ல் சி. சோர்ப்பனந்தல் திராவிடர் கழகத்திற்கு தோழர்கள் பே. ராமன் தலைவராகவும், எம். கே. குருசாமி செயலாளராகவும் கொண்ட நிர்வாகக்கமிட்டி தேர்ந்தெடுக்கப்பட்டது.

o o

28-4-46ல் சாத்தூர் நகர திராவிடர் கழகத்திற்கு தோழர்கள் சா. கருப்பையா தலைவராகவும், பி. நடராசன், சா. ராமசாமி செயலாளர்களாகவும் கொண்ட நிர்வாகக்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

o o

4-5-46ல் சேலம் ஜில்லா சிவாதாபுரத்தில் திராவிடர் கழகம் நிறுவப்பட்டு தோழர்கள் எஸ். ஆறுமுகம் தலைவராகவும், எஸ். கந்தசாமி செயலாளராகவும் மற்றும் 13 பேர் உறுப்பினர்களாகவும் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டது.

o o

30-4-46ல் வரகூர் திராவிடர் கழகத்திற்கு தோழர்கள் சி. வீ. இராமசாமி தலைவராகவும் சி. சுந்தரராசன் செயலாளராகவும் மற்றும் 8பேர் உறுப்பினர்களாகவும் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டது.


## பெனிபிட் சேவிங்ஸ் சீட்டு

மாதம் ரூ. 5 வீதம் கட்டவேண்டும். சீட்டு விழுந்ததும் கட்டவேண்டாம். சீட்டுதாருக்கு ரூ. 1000 வரை கடன் தருகிறோம். ஒருவர் எத்தனை சீட்டும் போடலாம். உடன் எழுதவும்.

தாய்நாடு சேவிங்ஸ் பண்ட்,
நாங்குனேரி P. O.

## நூதன பாக்கட் ஸ்டவ் அடுப்பு

காப்பி, டீ, குழந்தைகளுக்குப் பால் போன்ற அவசரமாக காய்ச்சிக்கொள்ளக் கூடிய சிறிய அடுப்பு. கரி, எண்ணை தேவையில்லை. வண்டிப்பிரயாணம் முதலியவைகளுக்கு உபயோகித்துக்கொள்ளலாம். ஒரு தடவை ஆர்டர் கொடுத்துப் பாருங்கள். குறைந்த விலை ரூ. 2-4-0.

மு. கண்ணன்,
20, சீனிவாசஐயர் தெரு,
நெல்வயல்ரோட், செம்பியம் P. O.
மதராஸ்.

## தேவை! தேவை!!

எங்கும் புகழ்பெற்ற N. K. P. வேல் டைரக்ஷன் ஆயில்கள், சோப் விற்பனை செய்ய ஏஜண்டுகள் தேவை! இண்டாந்திரியன் முதல் நெப்தால் வரை உபயோகப்படுத்தலாம். சாயத்தொழிலுக்கு முதன்மைபெற்றது. ஒரே மணி நேரத்தில் நூல் ஊனைந்துவிடும்; அப்பொழுதே சாயங்கள் தீர்க்கலாம், ஆர்டர்களுக்கு முந்துங்கள், விபரங்களுக்கு எழுதவும். விலாசம்:-

செல்வம் டர்க்கிரெட் ஆயில் ஸ்டோர், திருச்செங்கோடு, சேலம்ஜில்லா.

# இயக்கச் செய்திகள்

5-4-46ல் மூவலூர் சாமினாதன் அவர்கள் தலைமையில் மேலமருதாந்த நல்லூரில் தி. ப. நாதன், சவுந்திராஜன் திராவிடர் நிலை குறித்து பேசினார்கள்.

14-4-46 காலை 10மணிக்கு எம். எ. சாமி அவர்கள் தலைமையில் மேலபட்டமங்கலத்தில் திராவிடர்கழக முதலாவது ஆண்டுவிழா நடைபெற்றது.

17-4-46 மாலை 7மணிக்கு கழுக்காணி முட்டத்தில் தோழர் குப்பு தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. மூவலூர் சாமிநாதன், சவுந்திராசன் சொற்பொழிவாற்றினார்கள்.

13-4-46 மாலை 6-30 மணிக்கு கரூர் காமாட்சியம்மன்கோவில் தெருவில் என். ஆர். முத்துராஜன் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்று தோழர்கள் பி. கே. அய்யா எம். எ. நற்கீரன், வி. சி. குழந்தைசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள், எம். கே. கரிகாலன் நன்றி கூறினார்.

21-4-46மாலை 6மணிக்கு பிராட்வே சீராமுலு நாயுடு பார்க்கில் 12வது வட்டத் திராவிடர் கழகத் திறப்புவிழா நடைபெற்றது. தோழர் காஞ்சி மணிமொழியார் தலைமை வகித்தார். C. D. T. அரசு கொடியை ஏற்றுவித்தார். என். வி. நடராசன் கழகத்தை திறந்துவைத்தார். என்.ஜீவரத்தினம் பெரியார் அவர்களின் படத்தைத் திறந்துவைத்தார். தோழர்கள் கே. கோவிந்தசாமி, துரையரங்கனார், மற்றும் பலர் பேசினர். தோழர் மூர்த்தி வணக்கங்கூற கூட்டம் இனிது முடிவுற்றது.

17-4-46ல் திருச்சி கலெக்டர்ஆபீஸ் அருகில் மிளகுப்பாறை துலுக்காணத்தம்மன் கோயில் முன்பு தோழர் கே. அங்கமுத்து தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர் டி. எ. மாணிக்க வாசகம் திராவிடர் கழகத்தை திறந்து வைத்தார். தோழர்கள் டி. கே. சீனுவாசன், எஸ். தீனதயாளு ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

14-4-46ல் கள்ளிகுளம் பொது மைதானத்தில் கள்ளிகுளம் திராவிடர் கழக முதலாண்டு விழா தோழர் இ. வெ. அ. வள்ளிமுத்து அவர்கள் தலைமையில் நடைபெற்று தோழர்கள் பண்டிட் சந்திரா, மனோகரன், பாவலர் பாலசுந்தரம், டி. கோவிந்தராசலு, தில்லை ஆகியோர் சொற்பொழிவு ஆற்றினார்கள். பல தீர்மானங்கள் நிறைவேறியபின் தோழர் எ. சேக் நன்றி கூறினார்.

19-4-46ல் தஞ்சை பாரதிதாசன் வாசகமன்றத்தின் சார்பில் தோழர் இமயவரம்பன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர்கள் எஸ். ஆர். சுப்பண்ணா, கோவிந்தராசன், ஞானசௌந்தர பாண்டியன், சுப்ரமணியன், குலசேகரன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

16-3-46 இரவு வடஆற்காடு சோர்ப்பாக்கல் கிராமத்தில் தோழர் ஆர். மாணிக்கவேல் அவர்கள் தலைமையில் இரணியன் அல்லது இணையற்றவீரன் எனும் சீர்திருத்த நாடகம் சிறப்பாக நடைபெற்றது.

13-4-46ல் பெங்களூர் உப்புமா நகரில் தோழர் கே. சின்னதுரை அவர்கள் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் மறைந்த மாவீரர் ம. சிங்காரவேலருக்காக அனுதாபம் தெரிவிக்கப்பட்டது. தோழர்கள் எம். பி. சாமி, என். மாணிக்கம், கே. கே. சுந்தராம், எ. வி. படிசேராம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

21-4-46ல் நகர் திராவிடர் கழக ஆண்டுவிழா தோழர் கு. நல்லதம்பி அவர்கள் தலைமையில் நடைபெற்று தோழர்கள் எஸ். சவரிமுத்து மற்றும் பலர் பேசினர். தோழர் எ. ராஜு நன்றி கூறினார்.

16-4-46ல் குள்ளம்பட்டியில் சுயமரியாதைச் சங்கச் சார்பில் தோழர் சி. கந்தசாமி தலைமையில் ஓர் கூட்டம் நடைபெற்று தோழர்கள் ப. காசிலிங்கம், அ. இரங்கன், மு. பொன்னுசாமி முதலியோர் பேசினார்கள்.

கும்பகோணம் உயர்நிலைப்பள்ளித் திராவிட மாணவர் கழகத் துடக்கவிழா 8-4-46 மாலை 6மணிக்கு இந்நகர் காங்கேயன் பார்க்கில் தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர் இரா. இளம்வழுதி அரிய சொற்பொழிவாற்றி கழகத்தைத் திறந்துவைத்தார். தோழர்கள் கே. அன்பழகன், எஸ். கே. சாமி, புலவர் குழந்தையா ஆகியோர் "திராவிட மாணவர் நிலைமையும் நோக்கங்களும்" எனும் பொருள்பற்றி நீண்டநேரம் விரிவுரை ஆற்றினர். பின்பு பட்டுக்கோட்டை தோழர் சாமிநாதன் அவர்களுக்கு டி. இராமதாசு, ஆர். சொக்கப்பா இருவரும் வரவேற்புரை கூறினார்கள். தலைவர் முடிவுரைக்குப்பின் கழகத்தலைவர் நன்றி கூற கூட்டம் இனிது முடிந்தது.

20-4-46 மாலை 7மணிக்கு நாகர் கோவில் திராவிடர் கழகத்தின் சார்பில், மருங்கூர் வாசிப்புச்சாலையின் முன்புறம் தோழர் பத்மனாபன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர்கள் கே. மதியழகன், மனோகரன், கிருஷ்ணமூர்த்தி சொற்பொழிவாற்றினார்கள்.

19-4-46ல் தோழர் முருகேசம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர்கள் இளஞ்சேரன். பாலசுப்ரமணியம், கே. ஆர். ஜி. பால் ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள்.

பீடிகளுக்கு அரசன்

வெற்றிவேல்பீடிகள்

தினசரி 100000 மக்கள் உபயோகிக்கிறார்கள்.

ஒரே ஒரு முறை உபயோகித்துப் பாருங்கள். ஏஜண்டுகள் தேவை.

வெற்றி N. பழனியா பிள்ளை & Co.
நாங்குனேரி.

பிராஞ்ச்:- வள்ளியூர், கோவில்பட்டி & திருநெல்வேலி.

## வாழ்க்கை ஒப்பந்தங்கள்

17-4-46ல் சென்னை நுங்கம்பாக்கம் ச. பாலசுந்தரம் மகன் சரவணப் பெருமாளுக்கும், காஞ்சீவரம் வி. பொன்னுசாமி மகள் திருமகளுக்கும் சென்னையில் வாழ்க்கையொப்பந்தம் நடைபெற்று தோழர்கள் சிவமுத்துக்குமாரசாமி, சண்முகசுந்தரம் எம். எ. எல். டி., என். வி. நடராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். குடி அரசு வளர்ச்சிக்கு ரூபா 2 அளிக்கப்பட்டது.

எம். மங்களம்—கே. நடராஜன் திருமணம் 10-4-46ல் கருப்பட்டி பாலகிருஷ்ணபுரத்தில் தோழர் எஸ். தவமணிராசன் அவர்களால் நடத்திவைக்கப்பட்டது. தோழர் முத்திருளாண்டி பி. எ., சொற்பொழிவாற்றினார். குடி அரசு வளர்ச்சிக்கு ரூபா 1 அளிக்கப்பட்டது.

7-4-46ல் திருநள்ளாற்றில் தோழர் நள்ளாறன்—ஆச்சி அம்மாள் வாழ்க்கை ஒப்பந்தம் புரோகிதமற்ற முறையில் தோழர் பாலசுப்பிர மணியம் அவர்கள் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இதனை நடத்துவிக்க தோழர் ச. தங்கராசு பெருமுயற்சி எடுத்துக்கொண்டார். குடி அரசு வளர்ச்சிக்கு ரூபா ஒன்று அளிக்கப்பட்டது.

நாகை வெளிவை, தோழர் ஆறுமுகத்திற்கும், தோழியர் வள்ளியம்மைக்கும் பனங்குடி கிராமத்தில் டி. பி. ஆறுமுகம் அவர்கள் தலைமையில் 7-4-46ம் தேதி வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. நாகை தோழர்கள் பி. கே. பக்கிரிசாமி நடேசன், கோவிந்தசாமி ஆகியோர் சீர்திருத்த திருமணம் என்பதுபற்றி பேசினார்கள்.

26-4-46ல் தில்லை புலவர் நா. மு. மாணிக்கம் அவர்கள் தலைமையில் கூடலூர் O T. யில் தோழர் கோவிந்தன்—நீலதாட்சி வாழ்க்கையொப்பந்தம் சீர்திருத்த முறையில் சிறப்பாக நடைபெற்றது. வாழ்த்துகளும் அன்பளிப்புகளும் நல்கிய தோழர்களுக்கு மணமக்கள் நன்றி தெரிவித்துக்கொள்கிறார்கள். குடி அரசுக்கு ரூ. 1 அளிக்கப்பட்டது.

மாயவரம் தாலுக்கா சேத்தூரில் தோழர் கே. என். எஸ். மணி அவர்கள் தலைமையில் தோழர் கா. நாகராசன்—அலமேலு அம்மையார் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. தோழர்கள் மகாலிங்கம், எ. கோவிந்தராசன், டாக்டர் விசயராகவன் முதலியோர் சொற்பொழிவாற்றினர். குடி அரசுக்கு ரூ. 1 அளிக்கப்பட்டது.

17-3-46ல் பம்பாய் தாராவி பு. இ. ரோடி இல்லத்தில் நெல்லை அம்பாசமுத்திரம் தோழர் ஞா. ஞானப்புலவருக்கும் மேற்படியூர் பாப்பா என்கிற அந்தோணியம்மையாருக்கும் சமூக சீர்திருத்த மறுமணம் மிகச்சிறப்பாக தோழர் செல்லையா புலவர் முயற்சியால் நடைபெற்றது. எதிர்ப்புகள் யாவும் தகர்த்தெறியப்பட்டன. குடி அரசுக்கு ரூ. 1. அளிக்கப்பட்டது.

Edited, Printed, and Published by E. V. Krishnaswamy at the Tamilian Press 92, Cutchery street, ERODE.